கிருபையுள்ள வார்த்தை®

KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 23 | மார்ச் MARCH | 2023

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-

விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்..

லூக்கா 1:45

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE

ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை	3
பெண்கள் பகுதி	7
வாலிபர் பகுதி	9
சிறுவர் பகுதி	11

In memory of J.C. CHOATE

Guest Editors : **Betty Choate, Jerry & Paula Bates**

Editor : **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா, M.Th.,
R. ஆண்டனி ராஜா, D.Th.,M.B.A (Bible Studies)
Dr. V.S. இம்மானுவேல், M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
P. பேபி ராஜா D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. சுரூப்சாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L

கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

நம்பிக்கை T.V. யில்

ஞாயிறு மதியம் 3:30 மணி

தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 7:00 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)
சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

OUR ENGLISH TV PROGRAM

SALVATION TV

Every Sundays 2pm

Speakers:

Jerry Bates & Kingsly Rajah

வாசகர்கள் கவனத்திற்கு !

உங்களுக்கு அனுப்பப்படும் நமது மாத இதழ், சரியான காரணமின்றி சில நேரங்களில் திரும்பி வருவதால், உங்களுடைய தெளிவான முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை எங்களுக்கு அனுப்பிவைக்கவும்.

Phone : 92 4421 4421, 92 4431 4431, 99 9426 7004

கிருபையுள்ள வார்த்தை

பெண்ணை படைத்து ஆசீர்வதித்த அநாதி கர்த்தரின் வார்த்தை

World Literature Publication : Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

மரியாள்

ஆசிரியர் உரை

Dr. P.C. பிலேமோன் ராஜா

அன்பார்ந்த வாசகர்கள் அனைவருக்கும் இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். சிறப்பாக, சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரால் பெண்கள் தின நல்வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

இந்த மாதம் உங்களுடன், பைபிளில் மரியாள் என்ற பெயரில் உள்ள பெண்களைப் பற்றிய கருத்துக்களை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

மரியாள் என்ற பெயர் மிரியாம் என்ற எபிரெய பெயரின் லத்தின் வடிவம் என்று சொல்லப் படுகின்றது. இதன் பொருள் கசப்பான (Bitter), பிரியமான (Beloved), குழந்தைக்கு ஆசை (Wished-for child), கடல் துளி (Drop of the Sea) மற்றும் கிளர்ச்சி (Rebellious) என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. ஆயினும் இந்த பெயரை படிக்கும் போதெல்லாம் நமக்கு தாய்மையும், தூய்மையும் மற்றும் தேவ பக்தியும் தான் நினைவிற்கு வருகின்றது. ஏனெனில், பைபிளில் இந்த பெயரை கொண்டவர்கள் அவ்வாறாகவே பெரும்பாலும் இருந்ததினால் கூட அது இருக்கலாம்.

பைபிளில், மரியாள் என்ற பெயரை நாம் புதிய ஏற்பாட்டில் தான் பார்க்கின்றோம். இந்த பெயரில் ஏறக்குறைய ஆறு பேரை நம்மால் தனித்து புரிந்துகொள்ள முடிகின்றது. அவர்கள் யாரெனில், நமது ஆண்டவர் இயேசுவின் தாயாகிய மரியாள் **(லூக்கா 1:32).** மாற்குவின் தாயாகிய மரியாள் **(லூக்கா 8:2).** பெத்தானியா மரியாள் **(லூக்கா 10:42).** கிலெயோப்பா மரியாள் **(யோவான் 19:25).** மற்றும் ரோமாபுரி மரியாள் **(ரோமர் 16:6).** என நாம் அறிய முடிகின்றது. அவர்களிடமிருந்து ஆழமான சத்தியங்களை இந்த மாதம் நாம் அறிந்து கொள்வோமாக.

1. இயேசுவின் தாயாகிய மரியாள்

லூக்கா 1:26, 27 "ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில், தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டாள்; அந்தக் கன்னிகையின் பேர் மரியாள்.

நாம் முதலாவதாக, ஆண்டவர் இயேசுவின் தாயாகிய மரியாளிடமிருந்து கற்றுக்கொள்வோம். அவர்களை பற்றிய அறிமுகமே ''பெண்களுக்குள்ளே ஆசீர்வாதமும் கிருபையும் பெற்றவர்களாக'' இருக்கின்றார் **(லூக்கா 1:28).** என்பதனை அறிவிக்கின்றது.

லூக்கா 1:38 அதற்கு மரியாள்; இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.

கர்த்தருடைய சத்தத்தினை கேட்கவும், கர்த்தருடைய சித்தத்தினை ஏற்கவும் அதற்கு தன்னை அடிமையாக அர்ப்பணிக்கவும் ஏற்ற மனது மரியாளிடத்தில் இருந்தது. நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை வருமோ? என நாத்தான்வேல் பிலிப்பை பார்த்து கேட்டார் **(யோவான் 1:46).** இந்த மரியாள் நாசரேத்திலிருந்து வந்த நன்மையாக (முன்மாதிரியாக) இருக்கின்றார். ஏனெனில் இன்றைய நாட்களில் கர்த்தருடைய சத்தத்தினை கேட்கவே மக்கள் மனமின்றி உள்ளனர். அப்படி கேட்டாலும், அதனை ஏற்கவும், கீழ்ப்படியவும் மனமின்றி உள்ளனர். கீழ்ப்படியாமல் இருக்க நியாயமான காரணங்களை தேடிக்கொண்டிருக் கின்றனர்.

லூக்கா 1:34 "அதற்கு மரியாள்; தேவதூதனை நோக்கி; இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்".

மரியாள் மிகவும் கண்ணியமானவராக இருந்தார். ஆகையால் தான் இப்படிபட்ட பாக்கியத்தினை பெற்றுக்கொண்டார், ஏனெனில் பரிசுத்தமின்றி தரிசிக்க முடியாத கர்த்தரை, பிள்ளையாக பெற்றெடுப்பது என்பது சாதாரண காரியமல்ல. அவர்களது ஒழுக்கம் நிறைந்த வாழ்வு பாராட்டுக்குரியதாக இருக்கின்றது. தூதன், 'பிள்ளை பெறுவாய்' என்று சொன்ன உடனே, தனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்ற காரணத்தினை முன்வைக்கின்றார். திருமண

பந்தத்திற்கு பின்தான் தாம்பத்திய வாழ்வு என்பதில் அவர்களுக்கு இருந்த கண்ணியத்தினையே இது காண்பிக்கின்றது. திருமணத்திற்கு முந்தைய உறவுகள் எல்லாம் "வேசித்தனம்" என்பதனை அறிந்திருந்தபடியினாலும், அப்படிப்பட்ட பாவங்களுக்கு தன்னை விலக்கி காத்துக்கொள்ள கூடிய வராகவும் இருந்தபடியினால் தான், இப்படிப்பட்ட எதிர் கேள்வியை கேட்டார் என்பதனை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

இன்றைய நாட்களில், திருமணத்திற்கு முந்திய உறவுகள் பாவம் என்ற சிந்தை மலிந்து, அவைகள் சாதாரணமாக பார்க்கப்படுவதும், அப்படிப்பட்ட பாவங்களிற்கு யோசேப்பைப் போல விலகி ஓட வேண்டியவர்கள், விரும்பி அதனை நோக்கி ஓடுகின்றதும் மிகவும் கொடுமையான பாவமாகும் மற்றும் வேதனையான காரியமாகும். நாம் அவைகளுக்கு விலகி ஓடக்கடவோம். **2 தீமோ 2:22** "அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு".

மரியாளிடம் நாம் கற்க வேண்டிய மற்றொரு குணம், அவர்களது விசுவாசத்தோடு கூடிய தைரியமாகும் **(லூக்கா 1:38).** ஆண் துணையின்றி, தனது ஆண்டவரே தன்னிடத்தில் பிள்ளையாக பிறக்கப் போகின்றார் என்பதை விசுவாசித்தார். கன்னிப் பெண் திருமண உறவிற்கு முன்னே கருவுற்றால் அது அவமானமட்டுமல்ல, அவளை மரணமடையும் வரை கல்லெறிந்து கொல்லக்கூடிய கொடூர தண்டனை நிறைந்த காலகட்டமாகும் **(உபா. 22:20,21).**

மேலும், தன்னை திருமணம் செய்துகொள்ள போகும் யோசேப்பினால் சட்டப்படி புறக்கணிக்கப் படுவதையும் அவள் ஏற்க துணிந்தாள். ஆண்டவருக்காக அவமானத்தை ஏற்க துணிந்தாள். இது உண்மையிலேயே மிகவும் மெய்சிலிர்க்க வைக்கும் தைரியமுள்ள விசுவாசமாகும். விசுவாசிகளாகிய நாமும் மிகுந்த தைரியமுள்ளவர்களாக இருக்க வேண்டும். **எபிரேயர் 10:35** "ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்".

மரியாள் மற்றவர்களை வாழ்த்தும் மனமுடைய வராகவும், உதவிசெய்யும் மனமுடையவராகவும் இருந்தார் **(லூக்கா 1:39-41,56).** கர்த்தரை மனதார துதிப்பவராகவும் இருந்தார். **லூக்கா 1:46** "அப்பொழுது மரியாள்: என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது".

2. மாற்குவின் தாயாகிய மரியாள்

அப்போ 12:12 "அவன் இப்படி நிச்சயித்துக் கொண்டு, மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்".

அடுத்ததாக, நாம் மாற்குவின் தாயாகிய மரியாளைப் பற்றி படிப்போம். மாற்கு நற்செய்தி நூலை இயற்றிய மாற்குவின் தாய் தான் இந்த மரியாள். இவர்களிடம் நாம் காண்கின்ற குணம், கர்த்தருடைய சபை கூடிவரவும் ஜெபிக்கவும் தன் இல்லத்தினை திறந்து கொடுத்தது தான். அதுவும் எருசலேமில் சபை மிகவும் துன்பப்படுத்தப்பட்ட காலம் அது. யாக்கோபு, ஏரோது அரசனால் கொலை செய்யப்பட்டார். மேலும், பேதுருவும் கொல்லப்படும்படியாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த சமயம் அது. மிகவும் தைரியமாக தனது இல்லத்தினை கொடுத்தார்.

மாற்குவின் தாயாகிய மரியாளின் வீட்டிலே, சபையார் மிகவும் விசுவாசத்துடன் கூடி ஜெபித்தனர். நம்முடைய வீட்டினை நாம் எதற்காக பயன் படுத்துகின்றோம்? சபையாக கூடி ஜெபித்திடவா? சபையாக கூடி வேதத்தினை படித்திடவா? குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது உங்கள் போதகரை அழைத்து கர்த்தருடைய வார்த்தை யினை உங்கள் இல்லத்தில், வேத வசனம் போதிக்கப்படுகிறதா? உங்கள் வீட்டிலே தினமும் குடும்ப ஜெபம் நடக்கின்றத? அதாவது, நீங்களாவது உங்கள் வீட்டில் தினமும் குடும்பமாக கூடி ஜெபிக்கின்றீர்களா? சண்டையிடவும், சத்தமிடவும், சாப்பிடவும், பொழுது போக்கவும், ஓய்வு எடுக்கவும் மட்டும் நம் வீட்டை பயன்படுத்துவது ஆண்டவருக்கு மகிமையாக இருக்காதல்லவா?

2 தீமோ 4:11 லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக் கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன். இவர்களிடமிருந்து கற்க

வேண்டிய இன்னொரு குணம், தன் மகனை கர்த்தருக்குள் பிரயோஜனமாக வளர்த்தது. உண்மையிலே இது மிகவும் பாராட்டப்பட வேண்டிய குணமாகும். நம் பிள்ளைகளை நாம் எப்படி வளர்க்கின்றோம்? நமக்கு பிரயோஜனமாக வளர்க்க ஆசைபட்டு, அவர்கள் எதற்கும் பிரயோஜனமற்றவர் களாகிவிடுகின்றனர்.

பிள்ளைகளை நமக்கு பிரியமாக வளர்க்க முயல்வதும், அவர்கள் வழியிலே விட்டுவிடுவதும் தவறான வளர்ப்பு முறையாகும். மாறாக, நம் பிள்ளைகளை கர்த்தருக்கு பயந்து, அவருக்கு பிரியமானவர்களாக வளர்ப்பது மிகவும் நன்மை யானதாகும். கர்த்தருடைய வார்த்தையும் நம்மை அவ்வாறே உந்துகின்றது. **எபேசியர் 6:4** பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.

நம் பிள்ளைகளை, நாம் அவர்களது பள்ளிப் பாடங்களை படிக்க ஊக்கப்படுத்துகின்ற அதே வேளையில், பைபிளை படிக்கவும் ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களை வீட்டிலும் சபை கட்டிடங்களிலும் அவர்களால் முடிந்த வேலைகளை செய்ய வைத்து பழக்க வேண்டும். இது ஒரே நாளில் நடந்து விடாது. இது நீண்ட நெடிய நல்ல முயற்சி மற்றும் பயிற்சியாகும். நாம் அதனை பிள்ளை களுக்கு கட்டாயம் கொடுக்க வேண்டும். **நீதிமொழி 22:6** "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்".

இவைகளையெல்லாம் செய்யாமல், என் பிள்ளை ஊழியம் செய்ய வேண்டும். என் பிள்ளை உமக்கு பயந்து பிரியமாக வாழ வேண்டும் என வெறுமனே ஜெபம் செய்வதினால் மாத்திரம் இது சாத்தியமாகி விடாது. நாம் முயற்சி செய்யனும். ஏனெனில் கிரியை இல்லாத விசுவாசம் செத்தது. அப்படி செத்த விசுவாத்துடன், அதாவது விசுவாசமின்றி செய்கின்ற ஜெபம் பிரயோஜனமாக இருக்குமா? சற்றே நிதானித்து செயல்படுவோம்! **(யாக்கோப் 1: 5–7).**

3. மகதலேனா மரியாள்

லூக்கா 8:2,3 அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்துகொண்டு வந்த அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்.

அடுத்ததாக, நாம் மகதலேனா மரியாளைப் பற்றி படிக்கின்றோம். இவர்கள் ஆண்டவர் இயேசு வினால், ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து அற்புதமாக சுகமாக்கப்பட்ட ஒரு பெண். மகதலேனா என்ற அடைமொழி, இவர்கள் மக்தலாவின் திசைகளில் குடியிருந்தவராக இருக்கக் கூடும் என்று நம்பப்படுகின்றது. மகதலேனா என்ற பெயருக்கு உயர்ந்த கோபுரம் என்றும் பொருள்படும். இவர்கள் தங்கள் ஆஸ்தியை ஆண்டவரின் ஊழியத்திற்காக கொடுத்த ஒரு பெண்மணியாக இருக்கின்றார். இது உண்மையிலேயே மிகச்சிறந்த குணம் தான். ஊழியங்கள் வளரவும் பெருகவும் இவைகள் ஆண்டவருக்கே தேவைப்பட்டிருக்கும் என்றால், இன்றைய நாளில் செய்யப்படுகின்ற ஊழியங் களுக்கும் தேவைப்படுமல்லவா? ஆயினும் இன்றைய நாட்களில் இந்த மகதலேனா மரியாளை போன்று ஆசீர்வதிக்கப்பட்ட அநேக உள்ளங்கள் இருக்கின்றன. கர்த்தர் தாம் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கட்டும்.

நாம் கர்த்தருக்காக சபைக்கென்றும், ஊழியங் களுக்கென்றும் கொடுக்கின்ற காரியத்தில் எப்படிப் பட்டவர்களாக இருக்கின்றோம்? என்பதனை சிந்தித்துப்பார்ப்போம். குறையுள்ளவர்களாக இருந்தால் நம்மை நாமே மாற்றிக்கொள்வோம். பணக்கார வாலிபனைப் போல துக்கப்படுகின் றோமா? பர்னபா போல உற்சாகமடைகின்றோமா? மக்கதோனியா நாட்டு கிறிஸ்துவின் சபையாரின் முன் மாதிரியை பின்தொடர்வோம் **(2 கொரி 8:1–4).**

மாற்கு 16:9 வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார். இந்த மகதலேனா மரியாள் தான் உயிர்த்தெழுந்த ஆண்டவரை முதன் முதலில் தரிசிக்கும் பாக்கியத்தினை பெற்றார். அது மாத்திரமல்ல ஆண்டவர் உயிர்த்தெழுந்த செய்தியினை இன்றளவும் கோடான கோடி பேர் சொல்லியிருக்கலாம். ஆயினும் இந்த உலகத்திற்கு முதன் முதலில் சொன்னவர் இந்த மரியாள் தான். என்ன ஒரு பாக்கியம்? **யோவான் 20:18** மகதலேனா

மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்.

கல்வியும், அறிவியலும் பெருகிய இன்றைய நாட்களிலே, பெண்கள் அநேக இடங்களில் மதிப்பிற் குறைவாக நடத்தப்படுகின்ற செய்திகளை நாம் தினந்தோறும் அறிகின்றோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்திருக்கும் என்று நினைத்து பாருங்கள். இன்றளவும் பெண்களை ஒரு பொருட்டாக நினைக்காத பாலஸ்தீனத்தில் நிலைமை இன்னும் மோசமாயிருந்திருக்கும் அல்லவா? அப்படிப்பட்ட நாட்களில் தான் பெண்மை யினை மேன்மை செய்ய, ஆண்டவர் இயேசு ஒரு கன்னிப்பெண்ணிற்கு மகனாக பிறந்தார். பெண் களை ஊழியத்திலே உதவியாக பயன்படுத்தினார். அவர் உயிர்த்தெழுந்த செய்தியை, அவர்களை கொண்டு உலகிற்கு அறிவிக்கவும் செய்ய வைத்தார். **லூக்கா 24:10.** இவைகளை அப்போஸ் தலருக்குச் சொன்னவர்கள் மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், இவர்களுடனே கூட இருந்த மற்ற ஸ்திரீகளுமே.

4. பெத்தானியா மரியாள்

யோவான் 11:1–2 மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ள வனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப் பட்டிருந்தான். கர்த்தருக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான்.

அடுத்ததாக, நாம் பார்க்கின்ற மரியாள், எருசலேமிற்கு மிக அருகான பெத்தானியா என்ற கிராமத்தினை சேர்ந்தவர். இவர்களது சகோதரி மார்த்தாள், இவர்களது சகோதரன் லாசரு, இவர்களைப் பற்றி நாம் நன்கு அறிவோம். ஆண்ட வருடைய பாதங்களுக்கு பரிமளம் தைலம் பூசினாள் என்பது, இந்த உலகம் எதனை விலை மதிப்பு மிக்கதாக நினைக்கின்றதோ அதனை அவருடைய பாதத்தில் பூசினாள். மேலும், பெண் களுக்கு அவர்களது கூந்தல் முக்கியமான ஒன்று **(1 கொரி 11:15).** அதனால் அவருடைய பாதங்களை துடைத்தாள். இவைகள் மூலம் எதனை சொல்லிக் கொடுக் கின்றார்? ஆண்டவருக்கு முன்பு இந்த உலகில் மதிப்புமிக்கது மகிமையானது ஒன்றுமில்லை என்பதனையே வெளிப்படுத்துகின்றார் இந்த மரியாள்.

லூக்.10:39,42 அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார்.

பெத்தானியா மரியாளிடமிருந்து நாம் கற்கின்ற மற்றொரு பாடம், ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்து வசனங்களை கற்றுக்கொண்டார். நாம் வசனங்களை கற்றுக்கொள்வதில் எப்படி இருக்கின் றோம்? வேதத்தினை ஆராய்ந்து பார்க்க நேரம் ஒதுக்குகின்றோமா? அல்லது மார்த்தாளைப் போல பற்பல கவலைகளினாலே நேரமில்லை என்கின் றோமா?

தாவீது ராஜா சொல்வதை கவனியுங்கள். **சங்கீதம் 119:148.** உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக் கொள்ளும். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அதனை தியானிக் கின்றவர்களே பாக்கியவான்கள் **(சங்கீதம் 1:1,2).** மேலும் நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என ஆண்டவர் இயேசு சொன்னதினை மறக்க வேண்டாம் **(மத்தேயு 5:6).**

இறுதியாக, பிரியமானவர்களே! ஆண்டவர் இயேசுவின் சிலுவையின் அருகே துக்கத்துடனே நின்ற கிலெயோப்பா மரியாள். **யோவான் 19:25** இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள். மற்றும் மிகவும் பிராயசப்பட்டு ஊழியர்களை தாங்கிய ரோமாபுரி மரியாள். **ரோமர் 16:6** எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள். என ஒவ்வொருவரையும் குறித்துக் கூட ஆழமான காரியங்களை இன்னும் நாம் கற்றுக்கொள்ள முடியும். ஆயினும், இந்த மரியாள்களிடமிருந்து நாம் கற்ற நற்பண்புகளை நம்முடைய வாழ்விலும் நடைமுறைப்படுத்தி, நற்கனிகளாலே நமது பரமபிதாவை மகிமைப்படுத்துவோம். எல்லாம் வல்ல கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவராக!

அன்புடன்,
–ஆசிரியர்

அன்பான சகோதரிகளே, மரியாளின் மகன் என அழைக்கப்பட்ட, தேவ மைந்தனாகிய ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் உங்கள் அனைவருக்கும் பெண்கள் தின (மார்ச்-8) நல்வாழ்த்துக் களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைய நாளிலும் எதிரெதிரான இரண்டு பெண்களை குறித்து நாம் தியானம் செய்யலாம்? அவர்கள் யாரென்றால், பிரிஸ்கில்லா மற்றும் சப்பிராள். இவர்களுடைய பெயரை நாம் பெரும் பாலும் அவர்களது கணவருடைய பெயரோடு சேர்த்து, அனனியா சப்பிராள் மற்றும் ஆக்கில்லா பிரிஸ்கில்லா என சொல்வது தான் நம் அனைவருக் கும் வழக்கமான ஒன்றாகும். ஏனெனில் இருவரும் தங்கள் கணவரோடு இணைந்தே காரியங்களை செய்தனர்.

பிரிஸ்கில்லா

அ) கணவரோடு இணைந்து குடும்பத்திற்காக வேலை செய்தாள்

அப்.18:2,3 யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்ட படியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்துதேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர் களிடத்திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகின்ற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத்தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலை செய்துகொண்டு வந்தான்.

பிரிஸ்கில்லாவிடம் நாம் பார்க்கின்ற முதல் காரியம், அவள் தன் கணவரோடு இணைந்து, தன் குடும்பத்திற்காக உழைக்கின்றவளாக இருந்தாள். குணசாலி பெண்ணுக்குரிய தன்மைகளுள் ஒன்று அவர்கள் கடினமாக குடும்பத்திற்காக உழைப்பவர்கள் **(நீதிமொழி 31 13-18).** நம்மில் அனைவரும் குடும்பத்திற்காக உழைக்கின்றோம். ஆயினும் சில வேளைகளில் அதற்கான மதிப்பும் பாராட்டும் நமக்கு கிடைக்காத போது சோர்வடைகின்றோம். அப்படி நாம் ஆகிவிடக்கூடாது ஏனெனில் குடும்பத்தினர் பாராட்டு முக்கியம் தான் அதனைவிட குடும்பத்தின் வளர்ச்சியும் பாதுகாப்பும் முக்கியம் அல்லவா?

ஆ) கணவரோடு இணைந்து சுவிசேஷ வேலை செய்தாள்

அப்.18 24-26 அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசுபட்டணத்தக்கு வந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ள வனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக் கொண்டு வந்தான். அவன் ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கினபோது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்.

பிரிஸ்கில்லாவிடம் நாம் பார்க்கின்ற அடுத்த காரியம், அவள் தன் கணவரோடு இணைந்து, தன் குடும்பத்திற்காக மாத்திரமல்ல கர்த்தருடைய சபைக்காகவும் உழைக்கின்றவளாக இருந்தாள். இது உண்மையிலேயே மிகவும் பாராட்டத்தக்கது. பெரும்பாலான பெண்கள் குடும்பத்திற்காக உழைப்பதால், சபைக்காக உழைக்க முடியவில்லை என்று சொல்பவர்கள் இன்றைய நாட்களில் இருக்கின்றனர். ஆனால், பெண்களாகிய நாம் கர்த்தருக்காக அனுதினமும் உழைக்க வேண்டும் என்பதனை மறந்துவிடக்கூடாது. காரண காரியங்களை சொல்லி தவிர்க்கவும் முடியாது. ஏனெனில் அது நமது கடமை (1கொரி 9 16).

இ) கணவரோடு இணைந்து சபைக்காக மரிக்கவும் துணிந்தாள்

ரோம 16:3,4 கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில்

உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

பிரிஸ்கில்லாவிடம் நாம் பார்க்கின்ற பிரமிக்கதக்க காரியம், அவள் தன் கணவரோடு இணைந்து, சபைக்காக மரிக்கவும் துணிந்தாள். இது உண்மையிலேயே பிரமிப்பான ஒன்றுதான், நாம் பிழைத்திருப்பது (வாழ்வதே) கர்த்தருக்காக தான் என்ற சிந்தனையும் தெளிவான தீர்மானமும் உடையவர்களால் தான் இப்படி தைரியமாக விசுவாசத்தோடு செயல்பட முடியும். நம்மில் அநேக பெண்கள் நான் உயிரோடிருப்பதே, அல்லது இந்த உயிரை பிடித்துக் கொண்டிருப்பதே என் பிள்ளை களுக்காக தான் என சொல்கின்றவர்களாக இருக்கின்றோம். நன்றியற்ற இந்த உலகில், நாம் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாக அவருக்காக வாழ்கின்றவர்களாக இருப்போம் **(2 கொரி 5:15).**

சப்பிராள்

அ) கணவரோடு இணைந்து கர்த்தரை வஞ்சித்தாள்

அப் 5:1,2 அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

சப்பிராளிடம் நாம் பார்க்கின்ற முதல் காரியம், அவள் தன் கணவரோடு இணைந்து, தன் குடும்பத்திற்காக கர்த்தரை வஞ்சிக்கிறவளாக இருந்தாள். இது மிகவும் மோசமான குணம். இந்த குணம்தான் ஆசீர்வதிக்கப்பட்ட இஸ்ரவேலர்களின் வாழ்வை சாபமாக்கியது. அந்த சாபத்தினை ஆசீர்வதிக்கப்பட்ட அவர்கள் அந்த பாவத்திலிருந்து மனந்திரும்பி, கர்த்தருக்கென்று கொடுக்கின்ற காரியத்தில் தங்களை நேர்மையாக்கிக் கொள்ள வேண்டியிருந்தது **(மல்கியா 3:10).** ஏமாற்றுதலும் ஏமாற்றி பிழைத்தலும் சாபத்தீடானது. நேர்மையாக இருப்பதே ஆசீர்வாதமானது **(நீதிமொழி 28:20).**

ஆ) கணவரோடு இணைந்து பொய் பேசினாள்

அப் 5:7,8 ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப் பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள். பேதுரு அவளை நோக்கி : நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள்? எனக்குச் சொல் என்றான். அவள் ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள்.

சப்பிராளிடம் நாம் பார்க்கின்ற அடுத்த காரியம், அவள் தன் கணவரோடு இணைந்து, தன் குடும்பத்திற்காக கர்த்தரிடம் பொய் பேசுகின்றவளாக இருந்தாள். கர்த்தருடைய ஊழியர்களிடம் தான் பொய் பேசினாள். ஆனால் பேதுரு அதனை பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பேசினார்கள் என்று சொன்னார். காரணம் அது கர்த்தருக்கு விரோதமானதே **(யோவான் 13:20, சங் 51:4).** பொய்யர் அனைவரும் நரகத்திற்கு செல்வார்கள் என வேதாகமம் எச்சரிக்கின்றதனை மறந்து விட வேண்டாம் **(வெளி 21:18).**

இ) கணவரோடு இணைந்து தண்டிக்கப் பட்டாள்

அப் 5:9,10 பேதுரு அவளை நோக்கி கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்களும் வாசற்படியிலே வந்திருக்கிறது. உன்னையும் வெளியே கொண்டு போவார்கள் என்றான். உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப் போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக் கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம் பண்ணினார்கள்.

சப்பிராளிடம் நாம் பார்க்கின்ற மற்றொரு காரியம் அவளது குணமல்ல அவளது பாவமான குணத்தினாலே அவள் பெற்ற தண்டனை. ஆம் பிரியமானவர்களே, பாவத்தின் சம்பளம் மரணம் **(ரோமர் 6:23).** நாம் எதனை விதைக்கின்றோமோ அதனையே அறுப்போம் **(கலா 6:7,8).** நாம் கணவர்க்கு எல்லாக்காரியத்திலேயும் கீழ்படிய வேண்டும்தான் **(எபே 5:22).** அதே வேளையில் நமது நித்தியத்தினை இழக்கச் செய்யும் காரியங்களை நாம் செய்யவே கூடாது என்பதனை மறந்து விடவேண்டாம். **(கொலே 2:19).** நாம் யாராக இருக்க போகின்றோம் பிரிஸ்கில்லாவை போலவா? அல்லது சப்பிராளை போலவா? இன்றே தீர்மானம் செய்து நம்மை நாமே மாற்றுவோம். ஏனெனில் இந்த கால்ம பொல்லாதது **(எபே 5:16).**

– பேபி ராஜா

அன்பான வாலிபர்களுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களும் ! ஜெபங்களும். தலைமைத்துவம் சாத்தியமில்லாத இடங்களிலிருந்தும், கவனிக்கப்படாத நபர்களிடமிருந்தும் வரலாம். இவைகளை சொல்வதற்கு காரணம் உண்டு.

எரிகோ பட்டணத்தில் ராகாப் என்னும் ஒரு பெண் தன் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தாள். இயல்பு வாழ்க்கையில் தவறான வாழ்க்கை இந்த ராகாப் வாழ்ந்து வந்தாலும் அவளிடமிருந்து மதிப்புமிக்க தலைமைப் பண்புகளை பார்க்க முடிகின்றது. எபிரெயர் 11-ல் விசுவாசமுள்ள பெரிய மனிதர்களின் பட்டியலில் அவளை இணைக்கும் அளவிற்கு சிறந்த குணங்களை வெளிப்படுத்தினாள்.

1. ராகாப் சவால்களை ஏற்றுக்கொள்வாள் யோசு 2:1-4

ஒற்றர்கள் எரிகோவுக்கு வந்தபோது, ராகாபின் வீட்டிற்கு வந்தார்கள். அவளால் அவர்களை எளிதில் திருப்பிவிட முடியும். வேவுக்காரர்கள் எங்கு சென்றார்கள் என்று மக்கள் அரசரிடம் கூறினார்கள். எரிகோவின் ராஜா ராகாபன்டைக்கு ஒரு செய்தியை அனுப்புகின்றார். அவள் துணிச்சலோடு அந்த சவாலை ஏற்கிறாள். ஆபத்தை உணர்ந்து கடவுளின் பிள்ளைகளுக்கு உதவுவதே சிறந்தது என தெரிந்து துணிவோடு செயலில் இறங்கி வேவுக்காரரை தன் வீட்டிற்குள் ஒளித்து வைக்கிறாள்.

2. ராகாப் சூழ்நிலைகளை அங்கீகரிக்கும் திறன் கொண்டாள் யோசு 2:9-11

தன்னை சுற்றியுள்ள சூழ்நிலைகளை அவளால் அடையாளம் காண முடிந்தது. இது செயல்பட வேண்டிய நேரம் என்பதை ராகாப் அறிந்திருந்தாள். கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு நிலத்தை கொடுத்தார் என்பதை அவள் புரிந்துகொண்டாள். தன் குடும்பத்தை காப்பாற்றும் முயற்சியில் இறங்கினாள். அவளால் நிலைமையைப் பற்றிய பயத்தைப் பார்க்கவும், புத்திசாலிதனமாக செயல்படவும் முடிந்தது.

3. ராகாப் பரஸ்பரம் மற்றும் ஒருமைப்பாட்டின் யோசு 2:12-14

ராகாப் ஒற்றர்களிடம் தயவாக கொண்டதால் வேவுக்காரர்கள் தனக்கு ஒரு உறுதி பண்ண வேண்டும் என்று கோரினாள். பரஸ்பர கொள்கை என்பது நேர்மறையான செயலுக்கு மற்றொரு நேர்மறையான செயலடன் பதிலளிப்பதாகும். அவர்களும் ஏற்றுக்கொண்டு அவளது வாழ்க்கைக்காக உறுதி கொடுத்தனர். இருவரும் தங்கள், தங்கள் வார்த்தையில் உறுதியாய் இருப்பதே ஒருமைப்பாடாக உள்ளது.

4. ராகாப் மற்றவர்கள் மீது கவனம் செலுத்துகிறவள் யோசு 2:12-18

ராகாப் தன் வீட்டில் உள்ள அனைவரையும் காப்பாற்ற ஒற்றர்களிடம் பேச்சுவார்த்தை நடத்துகின்றாள். அவள் தன்னை காத்துக்கொள்ள பேசியிருக்கலாம். ஆனால் அவளோ தன் தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரிகள் மற்றும் அவர்களை சேர்ந்தவர்கள் அனைவரையும் காப்பாற்றும்படி ஒற்றர்களிடம் கேட்டாள். ராகாப் சுயநலம் கொண்டவள் அல்ல என்றும் அவள் குடும்பத்தை மதிப்பவள் என்றும் அவர்கள் அனைவரும் காப்பாற்றபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள் அதுதான் தலைமைத்துவம்.

5. ராகாப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறவள் யோசு 2:17-21

இந்த உறுதிமொழிக்கு ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கு ஒவ்வொரு தரப்பினரும் தங்கள் கடமையை நிறைவேற்றி பொறுப்பை ஏற்க வேண்டும். ராகாப் பொறுப்பை ஏற்று தேவையான அனைத்தையும் முடிக்க வேண்டும். அவளுடைய குடும்பம் அவளுடைய வீட்டில் இருக்க வேண்டும். ஜன்னலில் கருஞ்சிவப்பு வடம் இருக்க வேண்டும். இதைச் செய்தால், அவளுடைய குடும்பம் காப்பாற்றப்படும், ஏனென்றால் ராகாப் தலைமைப் பண்பை ஏற்றுக்கொண்டு செயல்பட்டாள்.

6. ராகாப் செயல்பாட்டின் மக்களா யிருந்தாள்

யோசு 2:21

ராகாப் ஜன்னலில் கருஞ்சிவப்பு கயிற்றைக் கட்டி, தன் குடும்பத்தாரை வீட்டிற்குள் அழைத்துச் சென்று பத்திரப்படுத்தினாள். யோசு 6:25ல் ராகாபையும் அவன் தந்தையின் வீட்டாரையும் அவளிடமிருந்த அனைத்தையும் யோசுவா காப்பாற்றினார் என்று கூறுவதால் அவள் அங்கே செயல்பட்டிருக்கிறாள் என்பது நமக்கு தெரிய வருகின்றது. அவள் எதுவும் செய்யாவிட்டால் இவ்வளவு பெரிய காரியம் நடந்தேறி இருக்க முடியாது.

எனக்கன்பான வாலிபர்களே ! ராகாப் ஒரு சிறந்த தலைவராக செயல்பட்டதை நாம் பார்த்தோம். நாமும் உலகத்தில் வரும் சவால்களை கிறிஸ்துவுக்காக ஏற்றுக்கொண்டு, சூழ்நிலைகளை அங்கீகரித்து, மற்றவர்கள் மீது நமது கவனத்தை செலுத்தி அவர்களை கிறிஸ்துவுக்காக செயல்பட வைப்போம்.

– உங்கள் அண்ணன்
JP

வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

Gospel Through Media by World Evangelism Team

Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV : Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431***) ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.* ***Salvation TV :*** *Every Sunday 2.00 p.m.*

Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV : Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

Arjunan in Tamil on Nambikai TV & Radio : TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV : Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana TV :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

P.R. Swamy & Douglas in Tamil on Radio : Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

P.K. Varghese in Malayalam on JaiHind TV : Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV : Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா, உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன். எல்லாரும் நல்லா இருக்கிறீர்களா?

இந்த முறைக்கூட பைபிளில் எஸ்தர் அக்காவிடம் இருந்து நல்ல காரியத்தினை கற்றுக்கொள்ள லாமா? பைபிளில் எஸ்தர் என்கிற அக்கா இருந்தாங்க, அவங்களுக்கு அப்பா, அம்மா கிடையாது. மொர்தெகாய் என்ற அவங்களுடைய சித்தப்பாதான், எஸ்தர் அக்காவை வளர்த்தாங்க. இவர்கள் அந்நிய நாட்டிலே அடிமைகளாக இருந்தனர்.

எஸ்தர் அக்கா அவர்களை வளர்த்த மொர்தெகாயுக்கு ரொம்ப கீழ்படிந்து நடந்து நல்ல பிள்ளையாகவும், மற்றும் கர்த்தருக்கு பயந்து வாழகின்றவர்களாகவும் இருந்தனர். அதனால் கர்த்தர், எஸ்தர் அக்கா எந்த நாட்டிலே அடிமையாக இருந்தாங்களோ, அதே நாட்டிற்கு ராணியாக உயர்த்தினார்.

அந்த நாட்டிலே ஆமான் என்ற மந்திரி இருந்தார். அவர் மிகவும் மோசமானவர். அந்த ஆமான் சதி செய்து, உலகமெங்கும் உள்ள யூத மக்கள் அனைவரையும் கொன்று போட பேரரசனாகிய அகாஸ்வேருவிடம் உத்தரவும் பெற்றார். அந்த வேளையில், எஸ்தர் அக்கா உபவாசம் செய்து கர்த்தரிடம் ஜெபம் செஞ்சாங்க. அதோடு மட்டுமில்லாமல், தன் உயிரே போனாலும் பரவாயில்ல என்று இருந்தாங்க. அதனாலே, எஸ்தர் அக்கா தம்முடைய மக்களை மிகவும் நேசித்ததினால், தனது உயிரையும் பொருட்படுத்தாமல், துணிவுடன் செயல்பட்டு மக்கள் அனைவரையும் காப்பாத்தினாங்க.

கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளா, நீங்களும் எஸ்தர் அக்காவைபோல உங்க அப்பா, அம்மாவுக்கு கீழ்படிகிறீர்களா? அது மாத்திரம் அல்ல நீங்கள் கடவுளுக்காக, சபைக்காக, பைபிள் படிக்க, ஜெபிக்க, ஊழியம் செய்ய எதையாவது தியாகம்

செய்கிறீர்களா? யூத மக்களை காப்பாற்ற எஸ்தர் அக்கா தன் உயிரையே கொடுக்க நினைத்தாங்க. இதன் விளைவு என்ன தெரியுமா? எஸ்தர் அக்காவை கர்த்தர் ஆசீர்வதித்து பாதுகாத்தார்.

மனப்பாட வசனம் : எபேசியர் 5:2 "கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.

– அன்பு ஏசுதாஸ்

சிறுவர்க்கான கேள்விகள்

குட்டீஸ், கீழே உள்ள கட்டங்களில் பைபிளில் உள்ள 10 பெண்களின் பெயர்கள் மறைந்துள்ளன, அவைகளை கண்டுபிடித்து எழுதி அனுப்புங்க...

ள்	யா	ரி	ம	னா	லே	த	க	ம
தா	ச	போ	தெ	ச	னா	ச	தெ	ஸ்
த்	ரூ	எ	அ	ன்	னா	ள்	போ	எ
ர்	ஸ்	ர்	ச	ஸ்	எ	ரூ	ரா	த்
மா	ரூ	த	லி	தெ	போ	யா	ள்	பெ
பி	ரி	ஸ்	கி	ல்	லா	லி	தா	ச
த்	ச	எ	தெ	கே	ரூ	ள்	லி	லி
எ	ஸ்	போ	னா	ரா	ஸ்	போ	ரூ	எ

தெபோராள்

ஹாய் குட்டீஸ், உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் அன்பின் வாழ்த்தக்கள்.

இந்த மாதம் தெபோராள் அக்காவிடமிருந்து ஒரு அருமையான காரியத்தினை கற்றுக் கொள்ளலாமா?

யார் இந்த தெபோராள்? கானான் தேசத்திற்கு வந்த இஸ்ரவேல் மக்களை யோசுவாவிற்கு பின்பு நியாயாதிபதிகள் (நீதிபதிகள்), கர்த்தருடைய ஆலோசனையின்படி மக்களை வழிநடத்தவும், பாதுகாக்கவும் செய்தார்கள். அந்த நீதிபதிகளின் பட்டியலில் வந்த ஒரே பெண் நீதிபதிதான் இந்த தெபோராள். இவர்கள் ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்தார்கள்.

அக்காலத்திலே கானானியர் என்பவர்கள் இஸ்ரவேல் நாட்டை பிடித்துக்கொண்டு அதன் மக்களை அடிமைகளாக வைத்திருந்தனர். அப்பொழுது இஸ்ரவேல் மக்களின் ராணுவ தலைவனாகிய பாராக் என்பவரை தெபோராள் அழைத்து, நீ போய் கானானியர்களோடு யுத்தம் பண்ணு. அவர்களையும் அவர்களுடைய சேனாதிபதியாகிய சிசெராவையும் நாம் வென்று விடுவோம் என கர்த்தர் சொன்ன வார்த்தையை அவருக்கு சொன்னாள்.

அதற்கு பாராக் என்ன சொன்னார் தெரியுமா? தெபோராளே நீயும் வந்தால் நான் யுத்தத்திற்கு போவேன், வராவிட்டால் போகமாட்டேன் என்று சொன்னார். தெபோராளோ நிச்சயமாய் வருகிறேன், ஆனாலும் நீ செய்கின்ற யுத்தத்திலே உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது. கர்த்தர் சிசெராவை ஒரு பெண்ணின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்று சொல்லி, அவருடனே யுத்தத்திற்கு சென்றாள். கர்த்தர் சொன்னபடியே அவர்களுக்கு வெற்றியை கொடுத்தார். மக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

அப்பொழுது, தெபோராளும், பாராக்கும் தங்களுக்கு விடுதலையை தந்த கர்த்தரை துதித்து நன்றி சொல்லி பாடினார்கள்.

குட்டீஸ், தெபோராள் அக்காவை பார்த்தீங்களா, எவ்வளவு தைரியமுள்ள பெண்ணாக இருந்தார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்த வேலையை எப்படியாவது செய்து முடித்துவிட வேண்டும் என்று யுத்தத்திற்கும் சென்றனர். நாமும் இந்த தெபோரா அக்காவை போல, கர்த்தர் நமக்கு கொடுத்த வேலையாகிய (பொறுப்பை) நற்செய்தி சொல்வதை நாள்தோறும் செய்வோமா? அப்படி செய்தால் கர்த்தர் நமக்கு வெற்றி தருவார்.

மனப்பாட வசனம் : 1 கொரி 9:16 "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ.

– ஏஞ்சலின் கமலம்

இம்மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாளைக் காணும் வாசகர்கள் அனைவருக்கும் கிருபையுள்ள வார்த்தை ஆசிரியர் குழுவின் சார்பாக வாழ்த்துக்களும், ஜெபங்களும் !

மோவாப் என்ற ஊரில் ரூத் என்ற ஒரு அக்கா இருந்தார்கள். ரூத் என்றால் தோழி என்று அர்த்தமாம். தோழி என்ற அர்த்தத்திற்கு ஏற்றாற் போல அந்த அக்கா எல்லாரிடமும் அன்பாகவும், பாசமாகவும் பழகி வந்தாங்க.

அந்த ஊருக்கு பெத்லகேமில் இருந்து நகோமி என்ற பெண் தன் கணவர் மற்றும் இரண்டு மகன்களுடன் வந்தாங்க. நகோமி தன் மகனுக்கு இந்த ரூத் அக்காவை திருமணம் செய்து வைத்தாங்க. சில நாட்களுக்கு பிறகு நகோமி தன் கணவர் மற்றும் இரண்டு மகன்களையும் இழந்துட்டாங்க. நகோமி மற்றும் ரூத் மிகுந்த வேதனையில் இருந்தாங்க. நகோமிவை விட்டு அனைவரும் சென்று விட்டார்கள். அவுங்கக்கூட இந்த ரூத் அக்கா மட்டும் இருந்தாங்க.

நகோமி எவ்வளவு எடுத்துக்கூறியும் ரூத் வயது சென்ற நகோமியை விட்டு செல்லவில்லை. ஏனென்றால் இயற்கையாகவே ரூத் பெரியவர் களுக்கு கீழ்படிந்து அன்புடன் பழகும் குணத்தை தனக்குள் சிறு வயதில் இருந்தே வளர்த்துக்கிட்டாங்க.

நாமும் ரூத்தைப் போலவே பெற்றோருக்குக் கீழ் படிந்து, வயது சென்ற பெரியோர்களை மதித்து அன்புடன் பழகவும், உதவி செய்யவும் வேண்டும்.

தன் சொந்த ஊருக்கு சென்ற நகோமி, ரூத் இருவரும் தனியாக இருந்தனர். வயது சென்ற நகோமி வேலை பார்க்க இயலாத காரணத்தினால் ரூத் தான் கஷ்டப்பட்டு வேலைபார்த்து தன் மாமியை காப்பாற்றினாள். இந்த மாதிரி அன்பான குணம் கொண்ட ரூத் அக்கா தன் மாமி பேச்சைக் கேட்டு கீழ்படிந்து தேவனுக்கு பிரியமான காரியங்களை செய்ததால் தேவன் ரூத் அக்காவிற்கு நல்ல சந்தோஷமான வாழ்க்கையையும் மிகுந்த ஆசீர்வாத்தையும் கொடுத்து பாதுகாத்தார்.

அது மட்டுமல்லாமல் ரூத் அக்கா மூலம், தாவீது ராஜாவும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பிறக்கும்படியான யாவருக்கும் கிடைக்காத மிகுந்த ஆசீர்வாததைதையும், கிருபையையும் வழங்கினார்.

நாமும், தேவனுக்கம், பெற்றோருக்கும் பெரியவர் களுக்கும் அன்புடன் கீழ்படிந்து தேவனிடத்தில் வரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோமாக.

மனப்பாட வசனம் : ரோமர் 13:8

"ஒருவரிடத்திலொருவர் அன்புகூறுகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூறுகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்".

– பிரியா ஆண்டனி

பொதுவான செய்திகள்

தமிழ் இலக்கணம்

தமிழ்மொழி இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூன்று பிரிவுகளை உடையது. இவையே 'முத்தமிழ்' என அழைக்கப்படக் காரணமாக விளங்குகிறது. முன்னோர் முத்தமிழின் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இலக்கணம் அமைத்தனர். அகத்தியம் முத்தமிழுக்கும் உரிய இலக்கண நூல் என்பர். இருப்பினும், பொதுவாகத் தமிழ் இலக்கணம் என்பது இயற்றமிழ் இலக்கணத்தைக் குறிப்பதாயிற்று. செய்யுள், உரைநடை ஆகியவற்றின் தொகுதி இயற்றமிழாகும். தொல்காப்பியம் இயற்றமிழில் கிடைத்துள்ள மிகப்பழைய இலக்கண நூலாகும்.

தமிழ் இலக்கணம் ஐந்து வகை. அவை,

1. எழுத்து 2. சொல் 3. பொருள் 4. யாப்பு 5. அணி

அறிஞர்கள் தமிழ் இலக்கணத்தை மூன்று வகை இலக்கணம் என்றும் ஆறு இலக்கணம் என்றும் ஏழு இலக்கணம் என்றும் வகைப்படுத்துவர்.

எழுத்து:

முதலெழுத்து : எழுத்தெனப் படுவ அகர முதல னகர இறுவாய் முப்பஃதென்ப.

தொல்காப்பியம் : உயிரும் உடம்புமாம் முப்பது முதலே.

நன்னூல் : 'அ' முதல்' ஔ' வரையுள்ள 12 உயிரெழுத்துக்களும், 'க்' முதல் 'ன்' வரையுள்ள 18 மெய்யெழுத்துக்களும் ஆகிய முப்பதும் முதலெழுத்துகள் எனப்படும்.

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன் பதான் அராம் என்ற ஊரிலே யாக்கோபு தன் மனைவியாகிய ராகேல் என்பவருடன் வாழ்ந்து வந்தார். இந்த முறை அந்த ராகேல் என்கிற அக்காவிடமிருந்து ஒரு முக்கியமான காரியத்தை கற்றுக்கொள்ள போகிறோம்.

தேவன் யாக்கோபிடம் : நீ மீண்டும் உன் சொந்த தேசமாகிய கானானுக்கு புறப்பட்டு போ என்று சொன்னார். தேவன் சொன்னபடியே யாக்கோபும் தன் மனைவிகள் பிள்ளைகள் வேலைக்காரர்கள் ஆடுமாடுகளை கூட்டிக் கொண்டு தன் சொந்த தேசத்துக்கு தேவனை சேவிக்கும்படி பிரயாணமாய் போனான். அப்படி அவர்கள் புறப்படும் போது ராகேல் என்ன செய்தாள் தெரியுமா?

தன் தகப்பன் வீட்டிலிருந்த சில விக்கிரங்களை (சிலைகள்) எடுத்து ஒளித்து வைத்துக்கொண்டாள். அவர்கள் கொஞ்ச தூரம் போனபோது ராகேலுக்கு தகப்பனும் யாக்கோபின் தாய் மாமனுமாகிய லாபான் அவர்களை தொடர்ந்து வந்து தன் வீட்டிலிருந்த சிலைகள் திருடு போனதைப் பற்றி சொல்லி யாக்கோபையும் அவனுக்கு உண்டான வைகளையும் சோதனைப் போட்டான். ராகேல் அக்காவிடமும் அதைக்குறித்து விசாரித்து சோதனை செய்யும் போது, அவைகளை எடுத்து ஒளித்து வைத்ததுமல்லாமல் அதைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் பொய் சொன்னாள். நம்மை படைத்த தேவன் உருவமில்லாதவர், விக்கிரக ஆராதனையை (அதாவது சிலை வழிபாட்டை) வெறுக்கிறவர். அப்படிப்பட்டவரை வணங்கி வந்தவள் விக்கிரகங்களை வணங்கும்படி நினைத்ததினால் ராகேல் அக்காவுக்கு என்ன நடந்தது தெரியுமா? அவர்கள் கானான் தேசத்திற்கு

போகும் முன்னே அவள் இறந்து போனாள். சிலைகளை கும்பிட்ட பாவத்தினால் அவளால் தேவன் இருந்த ஊருக்கு வர முடியவில்லை.

குட்டீஸ்! நம்மிடத்திலும் அதைப்போல பாவங்கள் இருந்தால் நாமும் பரலோகம் போக முடியாது. அதினால் நாமும் திருடாமல், பொய் பேசாமல், சண்டை போடாமல் நல்ல பிள்ளைகளாக இருந்தால் நிச்சியம் நம்மை படைத்த தேவன் இருக்கிற பரலோகத்திற்கு போகலாம்.

மனப்பாட வசனம் : I யோவான் 5:21

"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரங்களுக்கு விலகி, உங்களை காத்துக் கொள்வீர்களாக. ஆமென்".

– குயினி பிரதீப்

சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. ஹானா ஜோதி - மதுரை
2. M. ராஜா - கரூர்
3. M. ஜோனா - கரூர்
4. A. கார்பஸ் பிலேமோன் - மதுரை
5. பிரசன்னா - சித்தோடு

மார்ச் மாத கேள்விகள்

1. இயேசுவின் தாயாகிய மரியாளின் ஊர் என்ன?
2. தைரியத்தினை, ஏன் விட்டுவிடக்கூடாது?
3. அநேகர் கூடி ஜெபிக்கும்படி, தன்னுடைய வீட்டை தந்தது யார்?
4. ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதலை, அப்போஸ்தலருக்கு அறிவித்தது யார்?
5. தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கினை தெரிந்துகொண்டது யார்?
6. கிலேயோப்பா மரியாள் எங்கே நின்றிருந்தார்?
7. அப்பொல்லோவிற்கு கர்த்தருடைய மார்க்கத்தினை திட்டமாய் போதித்தவர்கள் யார்?
8. சப்பிராள் தன் கணவரோடு இணைந்து என்ன பேசினாள்?
9. ராகாப் வேவுக்காரர்களிடம் கர்த்தரைப் பற்றி சொன்னது என்ன?
10. யாரை, ஏன் பாக்கியவதி என்று எலிசபெத் சொன்னார்?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-04-2023

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

சென்ற இதழ் பதில்கள்

1. லேவி 13ம் அதிகாரம்
2. 2 நாளாகமம் 26:16
3. யாக்கோபு 4:6
4. லூக்கா 18:14
5. 2 ராஜாக்கள் 7:9
6. அப்போ 8:4
7. எண்ணாகமம் 12:9,10
8. 2 ராஜாக்கள் 5:14
9. லூக்கா 1:38
10. 1 சாமுவேல் 3:10

சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. A. டேவிட் ஜெயச்சந்திரன் – மதுரை
2. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
3. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
4. Mrs. மேரி ராஜ் – மதுரை
5. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
6. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
7. A. லலிதா – புதுக்கோட்டை
8. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
9. J. விஜய் – மதுரை
10. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
11. Mrs. ஹெலன் திலக் – தூத்துக்குடி
12. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
13. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – மதுரை
14. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
15. Mrs. J. ஜெயா ஜெபசெல்வம் – மதுரை
16. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
17. D.J. ஏஞ்சலினா – நாகர்கோவில்
18. K. ராஜா – அந்தியூர்
19. P. ஷைனி – காங்கேயம்
20. S. ஐஸ்வர்யா – காங்கேயம்
21. Mrs. P. இந்திரா – திருமங்கலம்
22. Mrs. S. சூரியபிரியா – மதுரை
23. S.M. தேவி ராஜாசிங் – திருப்பூர்
24. Mrs. P. உமாராணி – ஈரோடு
25. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
26. J. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
27. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
28. Mrs. R.P. டேவிட் – சேலம்
29. A. ஆனந்த கதிரோன் – சென்னை
30. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
31. S. பாக்கியராஜம் – மதுரை

சென்ற மாத விடுபட்டவர்கள்

1. S.M. தேவி ராஜாசிங் – திருப்பூர்
2. Mrs. P. உமாராணி – ஈரோடு
3. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
4. J. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
5. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
6. Mrs. R.P. டேவிட் – சேலம்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th March 2023
Posted at Arasaradi HPO on 10th 11th March 2023

கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்

அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

தபால் வழி பைபிள் பாடங்கள்

கைபிரதிகள்

உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

BIBLE STUDY BOOKS IN ENGLISH

AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : biblecourseindia@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers